ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1802/23 - 2013 මාර්තු මස 23 වැනි සෙනසුරාදා - 2013.03.23
*1802/23 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதிபெறாது மூன்றுமாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

கந்தஞானி கதீஸ்சன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள ஆளொருவராக திரு. யோன்பிள்ளை அன்ரன் சாள்ஸ் ஜான்சன் என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், திரு. யோன்பிள்ளை அன்ரன் சாள்ஸ் ஜான்சன் என்பவர் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். அச்சுதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2013, மாச்சு 13.

*4 - 278*

**பருத்தித்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக பருத்தித்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

பொன்னையா திருச்செல்வம் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், பருத்தித்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள ஆளொருவராக திரு. துரைசாமி மதியழகன் என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது பருத்தித்துறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், திரு. துரைசாமி மதியழகன் என்பவர் பருத்தித்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். அச்சுதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2013, மாச்சு 14.

4 - 279

---

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

தருமலிங்கம் கிருஷ்ணராசா எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள ஆளொருவராக திருமதி தம்பிராசா சியாமா என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், திருமதி தம்பிராசா சியாமா என்பவர் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். அச்சுதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2013, மாச்சு 14.

4 - 280

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.